24th September 1955]

SRI A. RATNAM : ஒன்பதாயிரத்தி முன்னூற்று ஐம்பத்து மூன்று பேர்கள் மேற்படி குற்றங்களுக்காக "அரெஸ்ட்" செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அவர்களில் எத்தனை பேர் ஆண்கள், எத்தனை பேர் பெண்கள், எத்தனை பேர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : இப்பொழுது அந்த விவரம் கொடுப்பதற்கு என்னிடம் போதிய விவரம் இல்லே.

SRI A. RATNAM : இம்மாதிரி குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்களில் பெண்களே ஆண்களைவிட அதிகம் என்பது உண்மையா ?

THE HON. SRI B. PARAMESWARAN : கனம் அங்கத்தினருக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம். நான் அதைப்பற்றி இப்பொழுது பதில் கொடுப்பதற்கு என்னிடம் தகவல் இல்லே.

SRI K. ARANGANATHAN : Because arrack was not included under the definition of liquor under the Madras Prohibition Act, a case ended in acquittal in the Subdivisional Magistrate's Court, Villupuram. May I know the various steps taken by this Government to include arrack under the definition of liquor?

THE HON. SRI B. PARAMESWARAN : That question does not arise from this question.

SRI V. BALAKRISHNAN : குற்றம் செய்வதற்கு ஆண்களுக்குப் போதிய தைரியம் இல்லாததனுல் ஆண்கள் பெண்களைத் தங்களுக்கு கையாட்களாக வைத்துக்கொள்ளுகிறுர்கள் என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : பெண்கள் செய்யும் செய்கைகளெல்லாம் கனம் அங்கத்தினருக்கு அதிகமாகத் தெரிந்திருக் கிறது.

Special Engineering Section for Malabar

* 2453 *Q.*—SRI K. C. GOPALAN UNNI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any special Engineering Section has been created in Malabar for investigating the possibilities of minor irrigation works;

(*b*) when it was created;

(*c*) where the headquarters of the section is located; and

(*d*) the results of investigation so far made?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. A special Engineering Section consisting of an Executive Engineer and three Supervisors has been created.

(*b*) The posts were sanctioned in G.O. Ms. No. 1331, Public (Planning and Development), dated 21st April 1955.

(*c*) At Kozhikode.

(*d*) It is now too early to give the results of the investigations.